**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 579/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW1/PW-1 | Village: | |
| Name | :நீலகண்டன் | Age | :33 |
| Father's/Husband's Name | : சங்கர் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 03/06/2023**

சாட்சியை திருவிடைமதூர் தலைமை காவலர் திருமதி நிவேதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது அய்யாவாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் பால் வேன் ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். கடந்த 2016 ம் ஆண்டு நான் பால் வேன் ஓட்டி கொண்டு வந்தபோது திருவிடைமதூர் காவல் நிலையம் அருகில் போலிசார் நிறுத்தி சோதனை செய்தபோது என்னிடம் ஒரு கையொப்பம் வாங்கி கொண்டார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் அதில் கையொப்பம் செய்யும் போது அதில் எழுதப்பட்டிருந்த விவரங்களை நான் பார்க்கவில்லை. நான் கையொப்பம் மட்டும தான் செய்தேன். **(புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

கடந்த 16/03/2016 ம் தேதி காலை 08.30 மணியளவில் நான் திருவிடைமதூர் கடை தெருவில் நின்று கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி ரஞ்சித் அங்கு வந்து கையில் வைத்திருந்த கத்தியை காட்டி மிரட்டி பாக்கெட்டில் இருக்கும் பணத்தை எடுடா என்று சொன்னதாகவும், பணத்தை எடுத்து கொடுக்கவில்லை என்றால் கத்தியால் குத்தி கொன்றுவிடுவேன் என்று மிரட்டியதாகவும், திருவிடைமதூர் காவல் நிலையத்தில் புகார் மனு அளித்து போலிசார் விசாரணையில் வாக்குமூலம் அளித்தேனா என்றால் இல்லை.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று சொல்லப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**